IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

SC No. 24/2024

dated : 18.09.2024

P.W. 1- ரகுநாத்

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.
குறுக்குவிசாரணை எதிரிகள் தரப்பில்

இறந்துபோன என் அண்ணனை காலையில் நான் பார்க்கச் செல்லும்போது கடையம் ரயில் நிலையத்திற்கு செல்பவர்கள், சந்தைக்கு சென்று வருபவர்கள் மற்றும் எதிர்திசையில் கடை வைத்திருப்பவர்கள் அங்கு இருந்தார்களா என்றால் ஆட்கள் நடமாட்டம் இருந்தது ஆனால் எதிர் திசையில் கடை வைத்திருப்பவர்கள் இருந்தார்களா இல்லையா என்று எனக்கு நியாபகம் இல்லை. நான் கடைக்குச் செல்லும்போது காலை 8.45 மணி இருக்கும். காலை 6 மணிக்கு திறக்கவேண்டிய கடையை நான் சென்ற போதும் திறக்காமல் இருந்ததால் நான் பதற்றம் அடையவில்லை. கீழ் தளத்தில் நான்கு அறைகள் உள்ளது. அங்கு எத்தனை மணி நேரம் தேடினேன் என்றால் சுமார் 5 நிமிடங்கள் தேடினேன். அதன் பின்னர் சத்தம் போட்டேன் பதில் இல்லை எனவே மாடிக்குச் சென்றேன். மாடியில் ஒரே ஹால் மட்டும் உள்ளது. நான் மாடிக்கு சென்ற பார்த்த போது அங்கு என் அண்ணன் கிடந்ததை பார்த்ததும் நான் பதற்றம் அடைந்தேன். நான் கொண்டு வந்த சுண்டல் மற்றும் பாத்திரங்களை கீழே வைத்து விட்டு தான் தேடினேன். அதை தரைதளத்தில் என் அண்ணன் வழக்கமாக படுத்திருக்கும் இடத்தில் வைத்து விட்டு தான் தேடினேன். அந்த இடத்தில் படுக்கை விரிக்கப்பட்டு இருந்தது. நான் மாடிக்கு சென்று பார்த்த போது என் அண்ணன் இறந்து கிடந்தது போன்று தெரிந்தது என்று முதல் விசாரணையில் கூறிய விவரத்தினை புகாரிலும், காவல் துறை விசாரணையிலும் கூறியிருக்கிறேனா என்றால் கூறியிருக்கிறேன். என் தாயாருக்கும் என் மனைவிக்கும் நான் தகவல் சொன்னேன். நான் தகவல் கூறிய பின்னர் அவர்கள் வந்துவிட்டார்கள். நான் காவல் நிலையத்திற்கு செல்லும் முன்பாக அந்த இடத்தில் 45 நிமிடங்கள் உறவினர்களுடன் இருந்தேன். அப்போது அருகில் இருந்த கடைக்காரர்கள், எதிரில் இருந்த கடைக்காரர்கள் எவரிடமும் என்ன நடந்தது என்று நான் விசாரிக்கவில்லை. அந்த 45 நிமிடங்களும் நாங்கள் அங்கு அழுது

கொண்டிருந்தோம். எதிரில் இருந்த கடைக்காரர்களும், வீட்டுக்காரர்களும் அங்கு வந்தார்கள். தாமரை கண்ணன் மற்றும் அவரது மனைவி வந்திருந்தார்களா என்றால் நான்அதை கவனிக்கவில்லை. வந்தவர்கள் என் அண்ணன் எங்கு இறந்து கிடந்தார், யார் முதலில் பார்த்தார் என்று கேட்டார்களா என்றால் கேட்டார்கள். உடனடியாக போலீசார் அங்கு வரவில்லை. காவல் நிலையத்திற்கு நானும், காமராஜும் சென்றோம். அங்கு உதவி ஆய்வாளர் இருந்தார். காலை சுமார் 10 மணி அளவில் புகார் கொடுத்தேன். புகாரை காமராஜ் எழுதினார். புகாரைப் படித்து பார்த்து முதல் தகவல் அறிக்கை தயாரிக்க மதியம் 11 மணி ஆனது. அவ்வாறு பதிவு செய்த நேரத்தில் ஆய்வாளர் அங்கு வந்துவிட்டார். அங்கு வைத்து ஆய்வாளர் என்னையும், காமராஜையும் விசாரித்தாரா என்றால் விசாரித்தார். தாமரை கண்ணன் மற்றும் அவரது மனைவியிடம் சம்பவம் நடந்த 2 அல்லது 3 நாட்கள் கழித்து தான் விசாரித்தேன். புகார் கொடுத்ததில் இருந்து நான் தாமரை கண்ணனை விசாரித்த வரை அவ்வப்போது இறந்து போன நரசிம்மன் கடைக்கு வந்து சென்றேனா என்றால் இல்லை. நானோ, என் குடும்பத்தாரோ அந்த கடைக்கு இடைப்பட்ட நாட்களில் வரவே இல்லை. 2,3 நாட்கள் கழித்து தான் டிஎன் 05 ஏவி 4151 என்ற இருசக்கர பல்சர் வாகனம் வந்ததும், 2,3 நபர்கள் என் அண்ணனுடன் பேசிக்கொண்டார்கள் என்பது பற்றியும் நான் போலீசாரிடம் கூறினேன். ஆய்வாளர் புகார் கொடுத்த அன்று சுமார் 2 அல்லது 3 மணி நேரம் சம்பவ இடத்தில் இருந்தார். என் முன்பாகவே நான் கொண்டு வந்திருந்த பாத்திரங்களையும், கைப்பையையும் பார்த்தார்கள். அதை சம்பவ இடத்தில் இருந்து எடுத்துக் கொண்டார்களா என்று நான் கவனிக்கவில்லை. சம்பவம் நடந்த கடை கட்டிடம் தற்போது இல்லை அது ஒரு தரைத்தளமும், மேல்தளமும் கட்டப்பட்டு திருமண மண்டபமாக மாற்றப்பட்டுள்ளது. அதை விற்றுவிட்டோம். விற்ற தொகையில் என் அண்ணன் மனைவிக்கு நாங்கள் பங்கு ஏதும் கொடுக்கவில்லை. என் அண்ணனுக்கு அவரது மனைவிக்கும் இடையே நீதிமன்றம் மூலம் விவாகரத்து நடக்கவில்லை. என் அண்ணன் உயிருடன் இருந்த காலத்திலேயே என் சகோதர, சகோதரிகளும் என் அண்ணனுடன் விரோதம் கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. என் அண்ணன் அவரது மனைவியை விட்டு பிரிந்து வாழ்ந்ததாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. என் அண்ணன் செய்திருந்த கொடுக்கல் வாங்கல் தொழில் மற்றும் எங்கள் குடும்ப சொத்து பிரச்சனை சம்மந்தமாக என்

அண்ணன் கொலை செய்யப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. என் அண்ணன் வழக்கமாக இரவு 8 மணிக்கு மேல் கடையை அடைப்பார். 26.08.2018 அன்று இரவு எங்கள் வீட்டிற்கு வந்து சாப்பிட்டு விட்டு இரவு 10 மணி வரை எங்களுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு பின்பு படுப்பதற்காக கடைக்குச் சென்றார் என்று நான் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன். இரவு 9 மணி அளவில் உணவு அருந்தினார். என்ன சாப்பிட்டார் என்று நியாபகம் இல்லை. என்னை போலீசார் விசாரித்த போது முதல்நாள் என்ன சாப்பிட்டார் என்று என்னை கேட்கவில்லை. நானும் முதல் நாள் அவர் அருந்திய உணவு பற்றி போலீசாரிடம் கூறவில்லை. 21.06.2018 ம் தேதி அன்று முத்துராமனை கைது செய்ததாக என்னை காவல் நிலையம் அழைத்தார்கள் என்று நான் முதல் விசாரணையில் கூறியிருந்தேன் என்றால் சரியல்ல. போலீசார் முத்துராமனை கைது செய்திருப்பதாக என்னிடம் தகவல் கூறியதன் அடிப்படையில் நான் காவல் நிலையம் சென்றதாக ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நான் கூறியிருக்கிறேன். நான் மட்டும் தான் காவல் நிலையத்திற்கு சென்றேன். போலீசார் முத்துராமனை விசாரித்ததற்கு என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்று எனக்கு நியாபகம் இல்லை. முத்துராமன் வாக்குமூலம் கொடுத்த போது உதவி ஆய்வாளரும், ஆய்வாளரும் இருந்தார் நானும் இருந்தேன். நான் காவல் நிலையம் செல்லும் முன்பாக போலீசார் முத்துராமனிடம் என்ன கூறினார்கள் என்றும் முத்துராமன் போலீசாரிடம் என்ன கூறினார் என்றும் எனக்குத் தெரியாது. முத்துராமன் ஒரு அறையில் இருந்து தான் வாக்குமூலம் கொடுத்தார். என்னையும், முத்துராமனையும் தவிர காவல்துறை அல்லாத வேறு நபர்கள் எவரும் அங்கு இல்லை. முத்துராமனின் வாக்குமூலத்தை ஒருவர் எழுதினார் அவர் உதவி ஆய்வாளரா, ஆய்வாளரா என்று தெரியாது காவல் துறையைச் சார்ந்தவர் எழுதினார். அன்றைய தினம் என்னிடம் எதுவும் கையொப்பம் பெறவில்லை. நான் கூறுவது போல் போலீசார் முத்துராமனை கைது செய்துவிட்டதாக தகவல் தெரிவித்ததாகவும், நான் காவல் நிலையம் சென்றேன் என்றும் முத்துராமன் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. முத்துராமன் என் முன்பாக நடந்த சம்பவங்கள் என்று கூறிய விவரங்கள், முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் முத்துராமன் கூறியதல்ல என்றும் அவற்றை வழக்கிற்காக வேண்டுமென்றே நான் பொய்யாக

கூறி சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. முத்துராமனை கைது செய்ததாகவும் அவர் வாக்குமூலம் கொடுத்ததாகவும் தெரிந்துகொண்டேன் என்று தான் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் சொன்ன நாள், நேரத்தில் இறந்துபோன நரசிம்மனை நான் தேடிச் செல்லவில்லை என்றும் அவர் இறந்து கிடந்ததை பார்க்கவில்லை என்றும் நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும் போலீசார் சம்பவ இடம் வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் அண்ணன் கடையம் புறநகரில் அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு இறந்து போனார் என்றும் போலீசார் முதலில் பார்வையிட்டு தகவல் தெரிவித்த பின்னரே என் அண்ணன் இறந்தது பற்றி தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. களஞ்சியம் மகன் தாமரைகண்ணன் மற்றும் அவரது மனைவியை நான் விசாரித்ததாக கூறுவதும் அவர்கள் சம்பவ தினத்தன்று இரவு டிஎன் 05 ஏவி 4151 என்ற இருசக்கர பல்சர் வாகனத்தில் வந்ததாக என்னிடம் கூறினார்கள் என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக நான் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. 27.08.2018 ம் தேதி பகல் 11.30 மணி அளவில் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரானது காவல் உயர் அதிகாரிகளின் ஆலோசனைக்கேற்பவும், எங்கள் குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைக்கு பின்னரும் உற்பத்தி செய்யப்பட்ட புகார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.